Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி 30 (14 - 07 - 1991) ஞாயிற்றுக்கிழமை ஓசை: 146

## செப். 30 --- ஒக். 6 வரை உலக ஆசிரியர் தினம்

(நல்லூர்)

உலக ஆசிரியர் தினம் செப்ரெம்பர் 30 ஆம் திகதியிலிருந்து ஒக்டோபர் 6 ஆம் திகதிவரை கொண்டாடப்படவுள்ளது. ஆசிரியர்களின் சேவை நலன்களைப் பாராட்டிக் கௌரவித்தல், ஆசிரிய தொழில் மகத்துவத்தைப் பிரதிபலிக்கும் நாடகங்களை மேடையேற்றுதல், கவிதை, கட்டுரை ஆகிய ஆக்கங்களைப் பிரசு (4 ஆம் பக்கம் பார்க்க)

# உப்பளத்தில் கடும் சண்டை; முற்றுகை தீவிரமாகிறது

### இன்று விசேட பதிப்பு

இன்று காலை 'ஈழநாதம்' விசேட பதிப்பு நேரடியாக களத்திலிருந்து வரும் செய்திகளுடன் வெளிவரவிருக்கிறது.

(ஆனையிறவு)

ஆனையிறவு இராணுவ முகாமின் ஒரு பகுதியான உப்பளத்தில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் கடும் சண்டை நடைபெற்று வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. அதிகாலை இச்செய்தி அச்சுக்குப்போகும்வரை மோதல் தொடர்ந்து நடைபெற்ற வண்ணமுள்ளது அதேவேளை ஆனையிறவு இராணுவமுகாம் மீதான புலிகளின் முற்றுகை தீவிரமடைந்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

ஆனையிறவு இராணுவ முகாமின் ஒரு பகுதியாக செயற்பட்டு வந்த ஆனையிறவு உப்பள இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்றிரவு கடும் மோதல் மூண்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. உப்பள இராணுவ முகாமின் ஒரு பகுதியாக இருந்த உல்லாசப் பயணிகள் விடுதி ஏற்கனவே புலிகள் வசம் வீழ்ந்து விட்டமை தெரிந்ததே.

மேலும் ஆனையிறவு இராணுவ முகாம் மீதான முற்றுகையை புலிகள் தொடர்ந்தும் தீவிரப்படுத்தியதைத் தொடர்ந்து சிறிலங்கா இராணுவம் பெரும் இக்கட்டில் மாட்டியுள்ளதாக தெரியவருகின்றது.

இராணுவத் தரப்பில் காயமடைந்தவர்களை எடுத்துச் செல்வதற்கு உலங்குவானூர்திகள் முகாமிற்குள் தரையிறங்க முடியாமல் உள்ளமை தெரிந்ததே.

## சுண்டிக்குளக் கடற்பகுதியில் சிறிலங்கா போர்க்கப்பல்

(ஆனையிறவு)

சுண்டிக்குளம் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படைக் கப்பல் பல தரித்து நிற்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகளின் தீவிர முற்றுகைக்குள்ளாகியுள்ள ஆனையிறவுமுகாமின் மீதான முற்றுகையை உடைக்கவும், இராணுவ வீரர்களைக் காப்பாற்றவும் கடல் மூலம் இராணுவத்தைத் தரையிறக்க சிறிலங்கா திட்டமிட்டுள்ளது போல் தெரிகின்றது

## வீரமரணமடைந்தோருக்கு மக்கள் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு சிறிலங்கா இராணுவமுகாம் மீதான தாக்குதலின்போது வீரமரணமடைந்த போராளிகளின் புகழுடல்களுக்கு பல்வேறு இடங்களிலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் நேற்று அஞ்சலிசெலுத்தினர்.

நேற்று முற்பகல் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் ஆறு போராளிகளின் புகழுடல்களும், கல்வியங்காடு சந்தை (4ஆம் பக்கம் பார்க்க)

## போராளிகளின் நினைவாக குடாநாடு சோகமயம்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடன் போராடி வீரமரணமடைந்த போராளிகளுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக யாழ் குடாநாடு எங்கும் தோரணங்கள், சிவப்பு, மஞ்சள் வர்ணக் கொடிகள் மற்றும் பதாகைகள் போன்றவை கட்டப்பட்டு சோகமே உருவாக குடாநாடு காட்சி அளித்தது.

குடாநாட்டின் பலபகுதிகளிலும்உள்ள வீதிகளிலும் தோரணங்கள், மற்றும் வாழை மரங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. பிரதான சந்திகளில் (4ஆம் பக்கம் பார்க்க)

## வீர வணக்கம்

கடந்த வியாழனன்று (11-07-91) ஆனையிறவில் வீரமரணமடைந்த மேலும் மூன்று பெண் போராளிகள் விபரம் வருமாறு:

★ லெப். அமுதினி (சிவசுப்பிரமணியம் சிவமதி, உரும்பராய் கிழக்கு, உரும்பராய்)

★ வீரவேங்கை யசோ (சிவஞானம் சுஜித்தா, செட்டியூர் தொண்டமானாறு)

★ வீரவேங்கை தமயந்தி (தில்லையம்பலம் மகேஸ்வரி பொன்னகர் முள்ளியவளை)

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைச் செலுத்தியுள்ளனர்.

## பிரயாணங்களைத் தற்காலிகமாக நிறுத்துக

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் தற்போது நிலவும் சூழ்நிலை காரணமாக குடாநாட்டிலிருந்து வெளியில் செல்பவர்கள் தமது பிரயாணத்தைத் தற்காலிகமாக நிறுத்திக் கொள்ளுமாறு கோரப்படுகின்றனர். அத்துடன் பிரயாணிகளின் பாதுகாப்புக் காரணமாக கொம்படிப் பாதைவழியாக பிரயாணம் மேற்கொள்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஓடிய 12 அதிகாரிகள் தற்காலிக பதவி நீக்கம்

(சென்னை)

சிறிபெரும் புதூரில் குண்டு வெடிப்பு ஏற்பட்டு ராஜீவ் காந்தி கொலையுண்ட போது அவ்விடத்தை விட்டு கடமையாற்றாமல் ஒடிவிட்ட தமிழக காவல் துறையைச்சேர்ந்த அதிகாரிகள் பன்னிரண்டு பேர் தற்காலிகமாக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் டி. ஐ. ஜீ. தரத்தையுடையவர்.

## போராளிகளை பராமரிப்பதில் பல்கலை. மாணவர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் காயமுற்ற நிலையில் இருக்கும் போராளிகளை பராமரிப்பதில் நூற்றுக்கும் அதிகமான பல்கலைக்கழக மாணவ மாணவிகள் தினமும் சேவையாற்றி வருகின்றனர்.

இதேவேளை நேற்று முன்தினம் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற இரத்ததானத்திலும் பலர் பங்குபற்றினர்.

## கடலோர காவற் படைக்கு விசேட பொலிஸ் பிரிவு

(சென்னை)

இலங்கையிலிருந்து போராளிகளின் ஊடுருவலைத் தடுக்கும் நோக்குடன் கடலோர காவல் படைக்கென சிறப்பு பொலிஸ் படையொன்று அமைக்கப்படவுள்ளது: இத்தகவலை மாநில சட்டசபையில் உரையாற்றிய முதல்வர் செல்வி ஜெயலலிதா வெளியிட்டார். ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் பேசிய அவர் மேலும், மாநிலத்தில் ஆயுத காவல்படை அதிரடி நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய ஒரு படையாகவும் மாற் (4ஆம் பக்கம் பார்க்க)

## அத்தாட்சிப் பத்திரங்கள் கிராமசேவகரிடம் இல்லை

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்தில் பெருமளவிலான கிராம சேவகர்களிடம் நற்சாட்சிப் பத்திரம், வதிவிட அத்தாட்சிப் பத்திரம் போன்றன இல்லாமையால் அனேக பொது மக்கள் இதனால் மிகவும் பாதிப்படைந்துள்ளனர்.

வேலைவாய்ப்புகளுக்கு அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்போர் இதனால் பாதிக்கப்படுகின்றார்கள்.

சில கிராம சேவகர்களிடம் இப்பத்திரங்களைப் பெறுவதற்கு மக்கள் சென்று கேட்டதும் பத்திரங்கள் முடிந்து விட்டதாக கூறியதும் மக்கள் ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர். (24)

## அரச ஊழியர்களுக்கு வீடு கட்டக் கடன்

(கொழும்புத்துறை)

அரச ஊழியர் காணி வேண்டுவதற்கு, வீடு கட்டுவதற்கு கடன் அடிப்படையில் ஊழியர்களின் 5 வருட கடன் சம்பந்தமாகக் கடந்த 14-6-91 திகதியுடைய சுற்றுநிருப இலக்கம் 111/01 மூலம் தெரிய வந்துள்ளது.

அரச ஊழியர்களுக்கு 5 வருடச் சம்பளக் கடன் அறவிடப்படுதல் சம்பளத்தில் 50 % ஆக இருக்கும். இந்தக் கழிவு 50 % அதிகரிக்கும் பட்சத்தில் இக்கடன் வழங்கப்படமாட்டாது. இதற்கு முன்தொகையான கடன் எடுத்தவர்கள் (4ஆம் பக்கம் பார்க்க)

# உடன்விநியோகம் இல்லாவிடில் பாரிய உணவுப்பஞ்சம் ஏற்படும்

### யாழ். அரச அதிபர் ச. தே. செ. சங்கத்திற்குக் கடிதம்

(ஆனையிறவு)

கப்பலில் இருந்து உணவு இறக்க அனுமதியளிக்காவிட்டால் யாழ். மாவட்டத்தில் பெரும் உணவுப் பஞ்சம் ஏற்படலாம் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கடிதம்மூலம் தெரிவித்துள்ளார்.

மேலும் அக்கடிதத்தில், உடன் உணவு விநியோகிக்க ஏற்பாடு செய்யுமாறும் கோரப்பட்டுள்ளது.

அதேவேளை சிறிலங்கா அரசாங்கம் திட்டமிட்டே இவ் உணவுப் பற்றாக் குறையைத் தோற்றுவித்துள்ளது. ஆனையிறவில் மோதல் ஆரம்பிப்பதற்கு இரு தினங்கள் முன்பாகவே கப்பல் வடக்கே வந்ததாயினும், கப்பல் காங்கேசன்துறைக்குச் சென்றதினால் உணவு இறக்கும் வேலை உடன் ஆரம்பிக்கப்படவில்லை யுத்தம் ஆரம்பித்த பின் ஊரடங்கைச் சாட்டாக வைத்து உணவு இறக்குவதை அரசாங்கம் நிறுத்தி வைத்துள்ளது.

# 1-ம் ஆண்டு நினைவு தினம்

வீர ஜனனம் 19 - 10 - 1961



வீர மரணம் 14 - 07 - 1990

## லெப்டினனன்ட் அம்பி

(சித்தன் கனகரத்தினம்)

லெப்டினன்ட் அம்பி நீ
தமிழீழ மண் மீட்க
தம்பியின் தலைமையில்
போர்க்களம் புகுந்த அம்பி
கதறுகின்றோம் கண்ணீர் சிந்துகின்றோம்
ஆசைக் கனவுகளை விட்டெறிந்து
தமிழீழ மண் மீட்கக் களம் புகுந்து
தமிழீழ மண்ணுக்கே அர்ப்பணமானாய்!
நீ தமிழீழ மண்ணுக்காய் செய்த தியாகம்
சரித்திரம உள்ள மட்டும் வாழும்
ஓராண்டு என்ன? ஒரு நூறு ஆண்டு
மறைந்தாலும் மாறாது நம் கவலை
மறையாது உன் நினைவு.

நாவற்காடு. அச்சுவேலி வாழ்மக்கள்.

(B/ 2793)

---

வர்த்தகம்

அக்குபங்சர்
ஹோமியோபதி
சிகிச்சை

கொழும்பு தெற்கு அரச வைத்தியசாலையில் கடமையாற்றும் விரிவுரையாளர்களினால் நாரிப்பிடிப்பு, மூட்டுவாதம், தொய்வு, காலைக் குத்து, மனநோய், தோல் வியாதிகள், நரம்பு தொடர்பான தீராத நாட்பட்ட நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. மேலதிக விபரங்களுக்கு; இல: 121/2, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம், இல: 95 யாழ்வீதி, மானிப்பாய், திருமதி. சத்தியமூர்த்தி, புகையிரத நிலைய வீதி, கொக்குவில். (R/1536)

---

## ஆசிரியர் சம்பள விபரம் கோரப்பட்டுள்ளது

வட - கிழக்கு மாகாணங்களிலுள்ள கல்வித்திணைக்களங்கள் மற்றும் கோட்டக்கல்வி அலுவலகங்களில் கடமையாற்றும் ஆசிரியர், ஆசிரியர் அல்லாத ஊழியர்களின் சம்பள விபரங்கள் கோரப்பட்டுள்ளன.

1990 டிசம்பர், 1991 மார்ச் மாதங்களுக்கான சம்பளப்பட்டியலில் இருந்து பின்வரும் சம்பள அளவுத்திட்டங்களின் அடிப்படையில் தரம்பிரித்து அனுப்பி வைக்குமாறு சொன்னைத் திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் செயலாளர் வட - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களங்களையும், கோட்டக்கல்வி அலுவலகங்களையும் கேட்டுள்ளார்.

ஆரம்பச் சம்பளமாக ரூபா 27,000 அதற்கு மேலும் சம்பளம் பெறுவோர், ரூபா, 17 280 முதல் ரூபா 27,000 வரை பெறுவோர், ஆரம்பச்சம்பளம் ரூபா 16,500 அதற்குக் கீழ் சம்பளம் பெறும் ஆசிரியர்களினதும், ஊழியர்களினதும் விபரங்களே கோரப்பட்டுள்ளன.

இவ் விபரங்களைத் திரட்டும் போது சம்பளத்திட்டத்தின் படி ஆசிரியரை வேறாகவும், ஆசிரியரல்லாத ஊழியர்களை வேறாகவும் காட்டுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

---

## இலங்கையின் சனத்தொகை 1 கோடி 74இலட்.

(கொழும்பு)

இந்தியாவின் சனத்தொகை கடந்த பத்து வருடங்களில் 14 கோடியால் அதிகரித்துள்ளது. இதன் தற்போதைய சனத்தொகை 84 கோடியாகும்.

இதேவேளை இலங்கையின் சனத்தொகை கடந்த வியாழக்கிழமை முற்பகல் 11 37 வரை ஒரு கோடியே எழுபத்து நான்கு இலட்சத்து நாற்பத்தையாயிரத்து நூற்றிருப்பத்தெட்டு எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

---

கோப்பாய் பயிற்சி ஆசிரியர்
சேவை ஒன்றியம்
விடுக்கும்

## அவசர அழைப்பு

மேற்படி சேவை ஒன்றியத்தின் செயற்திட்டங்களில் இணைந்து சேவையாற்றும் உறுப்பினர்களும, ஏனைய சகல பயிற்சி ஆசிரியர்களும், 15-07-91 திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு கோப்பாய் ஆசிரியகலாசாலையில் நிகழவிருக்கும் "இன்றைய சூழ்நிலையில் நாம் ஆற்றவேண்டிய சேவைகள்'' பற்றிக் கலந்துரையாட ஒன்றுகூடுமாறு அவசரமாக அழைக்கப்படுகின்றனர்.

(B/2809)

---

# நினைவு கூருகின்றோம்...

1991-07-14



2-ம்லெப்.மாலா



2-ம்லெப்.குமாரி



2-ம்லெப்அஜந்தா



கப்டன் சாலி



2-ம்லெப்.பிரியங்கா

1979ஆம் ஆண்டு இதே தினத்தில் சிறிலங்கா காவற்படையினரால் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்து சடலமாக வீசப்பட்ட நவாலியைச் சேர்ந்த விசுவஜாதி இரத்தினம் (இன்பம்) செல்வரத்தினம் (செல்வம்) இதே தினத்தில் கைது செய்யப்பட்டு காணாமற் போன நவாலியைச்சேர்ந்த பாலேந்திரா, சாவகச்சேரியைச் சேர்ந்த இந்திரராசா, நல்லூரைச் சேர்ந்த இராசேஸ்வரன், பரமேஸ்வரன்,

1986ஆம் ஆண்டு மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 4 தமிழர்கள்

1988ஆம் ஆண்டு கொக்காவிலில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் விவசாயி

1989ஆம் ஆண்டு இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட
நாகேஷ் (பஞ்சாட்சரம் நாகேஸ்வரராசா-காரைநகர்)

1990ஆம் ஆண்டு மாவிட்டபுரத்தில் நிகழ்ந்த எதிர்பாராத விபத்தினால் எமைப்பிரிந்த
கப்டன் சாளி (தேவநேசன் சாள்ஸ் ஜெகோசநேசன் - நவாலி தெற்கு, மானிப்பாய்)

காங்கேசன்துறையில் சிறிலங்காப்படையினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணமெய்திய
2ஆம்லெப். ஸ்ராலின் (தவபாலசிங்கம் - நல்லூர், பூநகரி)

கொக்காவில் சிறிலங்காப்படை முகாம் தகர்ப்பில் வீரமரணமெய்திய
கப்டன் சுகுமார் (திருக்கோணமலை)
கோபி (அம்பாறை)
2ஆம்லெப்.மாலா (இறீமதி அருளம்பலம் - நெடியகாடு, வல்வெட்டித்துறை)
2ஆம்லெப் அஜந்தா (சுசீலா தங்கரத்தினம்-சுசிலா வீதி, கவியங்காடு)
2ஆம்லெப்.குமாரி (ரட்ணம்மாள் கணபதி - திமிலாய்)
2ஆம்லெப்.பிரியங்கா (குமுதினி விநாயகபிள்ளை - தெடியகாடு, வல்வெட்டித்துறை)
லெப். நியூட்டன் (செ. புஷ்பராஜா - கிளிநொச்சி)
லெப்.மாவி (பாலசிங்கம் பரமானந்தம் - 156, மாவி வீதி, யோகபுரம், வவுனிக்குளம்)
லெப் சுமித்/ஹமீத் (முத்துமாணிக்கம் சண்முகராஜா - தென்னியன் குளம், துணுக்காய்)

கொக்காவில் முகாமிலிருந்து தப்பி ஓடிய சிறிலங்காப்படையினருடன், பலகை போட்ட பாலத்தடியில் ஏற்பட்ட மோதலில் வீரமரணமெய்திய
பகீ (பகீர் - வட்டக்கச்சி)
ராஜா

யாழ்ப்பாணத்தில் சிறிலங்காப்படையினரின் விமானக் குண்டு வீச்சினால் கொல்லப்பட்ட 4 தமிழர்கள்

திலகவெளி அகதி முகாமில் சிறிலங்காப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 6 தமிழர்கள்

மட்டக்களப்பில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டு, ரயர் போட்டு எரிக்கப்பட்ட 28 தமிழர்கள்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

**- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(B/2805)

### சிந்தனைக்கு

சுடுதலும் குளிரும் உயிருக்கு இல்லையாம்
சோர்வு வீழ்ச்சிகள் தொண்டருக்கு இல்லையாம்.

— பாரதிதாசன்

ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம், 14 07.1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

# போர் மண்ணில் பொங்கும் உணர்வுகள்

ஆனையிறவில் ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து வட பாகம் எங்கும் யுத்தச் சூழ்நிலை ஒன்று உருவாகியுள்ளது. தமிழ் மக்கள் யுத்தகால வாழ்க்கை முறைக்குப் பழக்கப் பட்டவர்களாகையால் இது அவர்களுக்கு அச்சம் அளிக்கும் ஒரு விடயமாக இருக்கப் போவதில்லை.

விடுதலைப் போராட்டத்திற்கு மக்களின் ஆதரவு எப் பொழுதும் தேவை என விடுதலைப்புலிகள் தொடர்ந்து அழைப்புவிடுத்து வந்துள்ளபோதும், தற்போது ஏற்பட்டுள்ள ஆனையிறவு மோதலுக்கு மக்கள் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என விடுதலைப் புலிகள் மக்கள் முன் னணிச் செயலாளர் யோகரட்ணம் யோகி விசேட வேண்டு கோள் விடுத்துள்ளார்.

மோதலில் காயமடைந்த போராளிகளைப் பராமரிக்க உதவுமாறும், இரத்ததானம் செய்யுமாறும், வீதிகளில் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும்படியும் இவ் வேண்டு கோள் அமைந்துள்ளது.

போர்க்காலச் சூழலில் பொதுவாகவே மக்களுக்குச் சிரமங்கள் ஏற்படுவதுண்டு. ஆனால் சுதந்திரப் போராட் டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு அவையெல்லாம் பெரி யவை அல்ல. அவை தமது விடிவிற்கான நீண்ட பயணத் தின் போது ஏற்படும் சிறு தொல்லைகள்; இத்தொல்லை கள் சுதந்திர வேட்கை கொண்ட மக்களை ஒருபோதும் தடுத்துவிட முடியாது. இச்சிறு தொல்லைகள் அம் மக்களைத் தடுத்து நிறுத்திவிட முடியுமானால், அம் மக்கள் கூட்டத்தினர் சுதந்திரம் பெறுவதற்கு தகுதியற்ற வர்கள் என்றே சொல்ல வேண்டும். மேலும், போராட்ட மின்றியும், சிரமமின்றியும் சுதந்திரம் பெற்றவர்கள் தமது சுதந்திரத்தை உணர்ந்தவர்களாகவும் இல்லை, முழுமை யாக அனுபவித்தவர்களாகவும் இல்லை.

தமிழ் மக்கள் தமது சுதந்திர வேட்கையை பல முறை வெளிப்படுத்தியுள்ளமை போன்று ஆனையிறவு மோதலின்போதும் வெளிப்படுத்தியுள்ளனர். மோதல் ஆரம் பித்ததைத் தொடர்ந்து யாழ் போதனா வைத்தியசாலையில் ஆண், பெண் என்ற வேறுபாடின்றி நூற்றுக்கணக்கான மக்கள் இரத்ததானம் செய்ய முண்டியடித்தனர்; மூன்று தினங்களில் இருநூற்றுப் பதினைந்து பேர் இரத்ததானம் செய்தனர். இரத்ததானம் செய்ய இன்னும் நூற்றுக் கணக்கில் மக்கள் முன்வந்த போதும் இரத்தம் சேமிப்பு வசதியின்றி பெறப்படவில்லை இதேபோன்று பல்வேறு உதவிகளையும் போராளிகளுக்கு வழங்கி வருகின்றனர்; அவர்கள் தமது கடமைகளைப் புரிந்து கொண்டுள்ளனர்.

ஆனால், சிலர் இந்த யுத்த சூழ்நிலையையும், மக் களின் உணர்வையும் மறந்து நமது பண்பாட்டு பாரம் பரியங்களுக்கு முரண்பாடான செயற்பாடுகளில் ஈடுபடு கின்றனர்; அவ்வாறானதொரு நிகழ்ச்சியே யாழ் பல் கலைக்கழக மாணவரில் ஒரு பகுதியினர் இரு தினங் களுக்கு முன்னர் நடத்திய 'பொண்டிங்' ஆகும். இதற் காக பல்கலைக்கழக மாணவர் சகலரையும் குறை கூற முடியாது. ஒரு பகுதி மாணவர்கள் 'பொண்டிங்கை' நடத்திய போதிலும், ஒரு பகுதி மாணவர்கள் தற்போது நடந்துகொண்டிருக்கும் மோதலுக்கு எவ்வாறான உதவி களைச் செய்வது என்பது தொடர்பாக சில தீர்மானங் களை மேற்கொண்டு செயலாற்றியும் வருகின்றனர்.

அதன் ஒரு கட்ட நடவடிக்கையாக பல்கலைக்கழக மாணவ மாணவிகள் யாழ். போதனா வைத்தியசாலையில் இரவு பகலாக காயமடைந்துவரும் போராளிகளைப் பரா மரிப்பதில் மிகவும் கரிசனையுடன் ஈடுபட்டுள்ளார்கள்.

ஒரு சமூகத்தின் எல்லாத் தரப்பினரும் ஒரேமாதிரியாக இருப்பார்கள், இருக்க வேண்டும் என எதிர்பார்க்க முடியாது தான்; ஆனால், சமூகத்தின் பொது நோக்கிற் கும், ஒட்டத்திற்கும் முரண்பாடாக சிலர் செயற்படும்போது அது ஒரு வேதனை அளிக்கும் விடயமாகவுள்ளது; அதனை அவர்கள் நிறுத்த வேண்டும்;

அதனை அவர்கள் தமது சுதந்திரம் எனவும் தமது ''உயர்ந்த பண்பாடு'' எனவும் கருதினால் யாராலும் அதற்குப் பரிகாரம் காணமுடியாது. ஆனால் இவர்கள் எமது சமூகத்திற்கு அந்நியப்பட்டவர்கள் என்று மட்டும் துணிந்து குறிப்பிடலாம்.

# தியாக தீபங்கள்

(நேற்றைய தொடர்ச்சி)

ஒரு தடவை தமிழர் விடு தலைக் கூட்டணியின் கிராம யாத்திரை என்ற பெயரில் கிராம மக்களிடம் மாவட்ட அபிவிருத்திச்சபை என்ற மாய மானைக்காட்டி நடமாடி வந்த வேளையில் அதைப் பொறுக்க முடியாத ரஞ்ச னும், சமரும், சீலனும் புலேந் திரனும் தங்களுக்குத் தெரிந்த முறையில் எதிர் நடவடிக்கை எடுக்க முற்பட்டபோது, கூட் டணியினரின் வேலை வங்கிப் படிவத்தையும், கிராமசேவகர் போன்ற உத்தியோகத்தையும் எதிர்பார்த்து நின்ற ''தொண் டரடிப் பொடியர்'' சிலர் சீல னைக் கட்டிப்பிடித்துத் தாக்க முற்பட்டனர். உடனே சீல னைக் கட்டிப் பிடித்தவனுக் குப் பின்னால் சென்ற ரஞ்சன் தன்காலில் இருந்த செருப் பைக் கழற்றி அவன் முதுகில் வைத்து ''காண்ட்ஸ் அப்'' என்று உரக்கக் கத்தினான், முதுகில் வைக்கப்பட்டது துப் பாக்கி என எண்ணி பிடித்து வைத்திருந்த சீலனையும் விட்டுவிட்டு திரும்பிப் பார்க் காது ஓடினர் அந்த வீராதி வீரர்கள்.

இன்னொரு தடவை ரஞ்ச னும், மாத்தயாவும் தமிழீ ழத்திலிருந்து தமிழகம் செல் வதற்காக மோட்டார் சைக்கி ளில் வந்துகொண்டிருந்தனர். தமிழீழத்திலிருந்து விடுதலைப் புலிகள் இயக்க வீரர்கள் சில ரது புகைப்பட நெகற்றிவ் பிலிம் சுருள்களையும், 2 கிர னைட்டுகளையும் (வெடிகுண் டுகளையும்) தம்முடன் எடுத்து வந்தனர். மோட்டார் சைக் கிளை வீதியில் வழி மறித்து பொலிசார் ரஞ்சனையும் மாத் தயாவையும் விசாரித்தவாறே மோட்டார் சைக்கிளில் உள்ள பையைச் சோதனையிடத் தொடங்கினர். பொலிஸ் அதி காரி ஒருவன் பையிலிருந்து ஒரு சிறு பொதியை வெளியே எடுக்கிறான். அது விடுதலைப் புலிகளின் பிலிம் சுருள்கள் அடங்கிய பொதி. பிலிம்சுருள் தானே என்று அதனைப் பொருட்படுத்தாத பொலிஸ் அதிகாரி இன்னொரு பெரிய பொதியை ''இது என்ன வெடிகுண்டா'' என்று கேட்ட வாறே வெளியே எடுத்தவன் அது உண்மையிலேயே வெடி குண்டாக இருந்ததைக் கண்டு மிரண்டு விடுகிறான். அதைக் கவனித்த ரஞ்சன் ''அது வெடி க்கப் போகிறது தொடாதீர் கள்'' என்று பயமுறுத்தினான் அதைக்கையிலெடுத்தபொலிஸ் அதிகாரி பீதியுற்று நடுங்கி னார். அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய ரஞ்சன் கண் ணிமைக்கும் நேரத்தில் பொலிஸ் அதிகாரியின் மறுகை யில் இருந்த பிலிம் சுருள் பொதியை தட்டிப் பறித்துக் கொண்டு கூட வந்த மாத்த



கப்டன் லாலா / ரஞ்சன்

யாவையும் வருமாறு அழைத் துக் கொண்டு வேகமாக ஓடி னான் வெடிகுண்டு வீதியில் மிரண்டு போயிருந்த பொலி சார் ரஞ்சனும் மாத்தயாவும் ஓடுவதைப் பார்த்ததும் வெடி குண்டுப் பொதியைக் கீழ போட்டு விட்டு இருவர் மீதும் தம் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்க்கின்றனர்; ஆனால் அதற் குள் ரஞ்சனும் மாத்தயாவும் தப்பிச் சென்று விடுகின்றனர். பிடித்த புலிகளை தப்பவிட்டு விட்டோமே என்ற வருத்தத் துடன் பொலிசார் ரஞ்சனின் மோட்டார் சைக்கிளையும் வெடிகுண்டு பொதியையும் எடுத்துக் கொண்டு பொலிஸ் நிலையம் திரும்பினர்.

அக் காலத்தில் விடுதலைப் புலிகளின் புகைப்படங்கள் வெளியிடப்படாத காலம். பொலிசாரும் இராணுவத்தி னரும் முகாம்களுக்குள் முடங் காமல் வெளியே இயக்க உறுப் பினர்களை வேட்டையாடித் திரிந்த காலம். இயக்க உறுப் பினர்கள் குறைவாக இருந்த தால், புகைப்படங்களை வைத்தே இயக்க வீரர்களைப் பிடித்து விடக்கூடியசூழ்நிலை.

இந்நிலையில் பொலிசாரிடம் பிலிம் சுருள்கள் சிக்காமல் ரஞ் சன் திரும்ப மீட்டுக் கொண்ட செயலானது இயக்க வீரர்க ளால் மிகவும் பாராட்டப் பட்டது.

மக்களை ஒன்றிணைக்கும் முயற்சிகளில் இவன் தீவிரமாக ஈடுபட்டான். பருத்தித்துறை மக்களுக்கும் இன்னொரு கிரா மமக்களுக்கும் இடையில் கோஷ்டிச் சண்டை உருவான போது அவர்களிடையே ஐக் கியத்தை ஏற்படுத்த மிகவும் பாடுபட்டான். சமாதான முயற்சிகளுக்கு எதிராக செயற்பட முனைந்த இலரை தனது உறவினர் என்றும் பாராமல் தண்டித்தான். இவ னது சரியான அணுகுமுறை கள்தான் மக்களை புலிகளின் பின்னால் அணிதிரள வைத் தன.

அந்த இறுதி நாளில்கூட ஏனைய உறுப்பினர்களை பாதுகாக்கும் முயற்சியில்தான் இவன் தன்னை இழந்தான். செல்லக்கிளி, சீலன், ஆனந் முதலான போராளிகளின் முத லாண்டு நினைவஞ்சலியை ஏற்றி வந்த மோட்டார் வண் டிக்கு அரசபடையினரால் ஆபத்து ஏற்படக் கூடாது என் பதற்காக அவ் வண்டிக்கு முன் னால் தான மோட்டார் சைக்கிளில் சென்றான் எதிரே வந்த பொலிஸ் கொமாண் டோக்களின் கவனம் மோட் டார் வண்டியிடம் சென்று விடாமல் இருப்பதற்காக மோட்டார் சைக்கிளை வேக மாக ஓட்டிச் சென்றான். மோட்டார் வண்டியில் வந்த வர்கள் தப்பிவிட்டனர். இவ னது உடல் அந்நியப்படை களின் துப்பாக்கிச் சூட்டி னைத் தாங்கிக் கொண்டது. இவனுடன் கூட வந்த போராளி காயத்துடன் தப்பி விட்டான்.

எப்போதும் இயக்கத்தின் ஏனைய போராளிகளின் பாது காப்பைப் பற்றியே அக்கறை கொண்ட ரஞ்சன் தனது இறு திக் கணம் வரை மற்றவர் களைத் தப்பவைக்கவே பாடு பட்டான். இதன் மூலம் போராட்டத்தையும் பாது காத்தான்.

## சுருட்டு நெருப்புப் பற்றியதால் மரணம்

(சுன்னாகம்)

தெல்லிப்பளை நீராவத்தை யைச் சேர்ந்த முருகன் தம்பு (75) சுருட்டு நெருப்பு சாரத் தில் பற்றியதால் எரிகாயங் களுக்குட்பட்டு யாழ். வைத் தியசாலையில் அனுமதிக்கப் பட்டு கடந்த புதன் கிழமை மரணமானார்.

இவர் இரவு 11 மணியளவில் சுருட்டுப் புகைத்து விட்டுப் படுக்கைக்குச் சென்றபோது சுருட்டிலிருந்த நெருப்புசாரத் தில் பற்றி பரயும் எரிந்து பின் னர் வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டு அங்கு மரண மானார். (60)

## அணு ஆய்வுத் திட்டத்தை பாக். கைவிடப்போவதில்லை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் தனது அணு ஆய்வுத் திட்டத்தை கைவிடப் போவதில்லை என்று பாகிஸ் தானிய பிரதம மந்திரி நவாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

இஸ்லாமாபாத்தில் செய்தி யாளர்கள் மத்தியில் பேசிய நவாப் ஷெரீப் பாகிஸ்தான் மேற்கொண்டு வரும் அணு ஆய்வுத் திட்டத்தை தடுக்க மேற்கொள்ளப்படும் எந்த ஒரு முயற்சியும் அனுமதிக்கப்பட மாட்டாது என்று தெரிவித் தார்.

பாகிஸ்தானிய அணு நிலை யங்களை தாக்க முயலும் எந்த நாட்டோடும் போரிடு வதற்கு தமது நாடு தயார் என்றும் இந்தியா இணங்கி னால் அணு ஆயுத பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் கை யெழுத்திட பாகிஸ்தான் தயார் என்றும் அவர் தெரி வித்தார்.

முன்னதாக இந்தியப் பிர தமர் பி.வி. நரசிம்மராவ் பாகிஸ்தான் அணு ஆயுத தயா ரிப்பை கைவிட்டால் மாத்தி ரமே உறவுகள் மேம்பாடடை யும் என்று தெரிவித்திருந் தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## கொழும்பில் வெடிகுண்டுப் புரளி

(கொழும்பு)

கொழும்பு இராணுவக் கூட்டுப்படைத் தலைமையகத் திற்கு எதிரேயுள்ள பதினான்கு மாடிக் கட்டடத்தில் வெடி குண்டு வைக்கப்பட்டிருப்ப தாக அநாமதேய தொலை பேசி அறிவித்ததாம். அதைத் தொடர்ந்து அக்கட்டடத்தில் இருந்த சுமார் ஆயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்டோரை அப்புறப்படுத்திய இராணுவம் சோதனை நடத்திய போதும் வெடிகுண்டு எதுவும் கண்டு பிடிக்கப்படவில்லை.

## நாவிதன் வெளியில் முஸ்லிம்கள் அட்டகாசம் தீவைப்பு; ஆட்கடத்தல்

கத்தி, வாள் சகிதம் நாவி தன் வெளிக்கு வந்த 50 க்கு மேற்பட்ட முஸ்லிம் இளை ஞர்கள் ஐம்பதுக்கு மேற்பட்ட தமிழ் மக்களின் வீடுகளை எரித் ததுடன் பொருள்களைக் கொள் ளையடித்த பின் ஐந்துபொது மக்களைக் கடத்திச்சென்றனர்

சுறப்பட்டிமுனை, கல்முனை ஆகிய இடங்களைச் சேர்ந்த முஸ்லிம் இளைஞர்களே மேற் படி ஈவிரக்கமற்ற செயலில் ஈடுபட்டனர் இக்கும்பலினால் மூன்று பிள்ளைகளின் தந்தை யானவர் சித்தம்பி கணபதிப் பிள்ளை (வயது 50) மாணவ னான வே. விஜயகுமார் (வயது 16) இரண்டு பிள்ளை களின் தந்தையான பி. சர வணமுத்து (வயது 36) க. வாசு தேவன் (வயது 16) மாணவ னான கி. தயாபரன் (வயது 16) ஆகியோர் கடத்திச் செல்லப்பட்டனர்.

இதேவேளை கடந்த ஞாயிற் றுக்கிழமை கல்முனையைச் சேர்ந்த சுருட்டு வியாபாரி யான ஆறுமுகம் தருமலிங்கம் (வயது 26) என்பவர் நாவி தன் வெளியில் வைத்து இரா ணுவத்துடன் வந்த முஸ்லிம் இளைஞர்களால் கடத்திச் செல்லப்பட்டார்; கடத்திச் செல்லப்பட்ட இவர்களுக்கு என்ன நடந்ததென்பது இது வரை தெரியவில்லை;

## ஈராக்கிற்கு வல்லரசுகள் இறுதி எச்சரிக்கை

(நியூயோர்க்)

ஈராக்கில் உள்ள அணுசக்தி அமைப்புகள் பற்றிய விரிவான அறிக்கையை இரு வாரங்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்று ஐ. நா. பந்தோபஸ்து சபையின் ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகள் ஈராக்கிற்கு இறுதி எச்சரிக்கை விடுத்துள்ளன.

ஆனால் கடந்த ஞாயிற்றுக்கிழமையே இந்த விபரங்கள் அடங்கிய பட்டியலை ஏற்கனவே கொடுத்து விட்டதாக ஐ. நாவிற்கான ஈராக்கிய தூதர் டாக்டர் அல் அல்பாரி குறிப்பிட்டுள்ளார்.

சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலில் முக்கியமான தகவல்கள் எதுவுமே இடம் பெறவில்லையென அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

## வட ஈராக்கிலிருந்து அமெ. படைகள் வாபஸ்

(வாஷிங்டன்)

அமெரிக்காவும், அதன் கூட்டணி நாடுகளும் வட ஈராக் பகுதிகளிலிருந்து அதன் படைகள் அனைத்தையும் மீளப்பெற முடிவு செய்துள்ளன. ஆனால் வடஈராக் பகுதியிலிருக்கும் குர்திஷ் இன மக்களின் பாதுகாப்புக்கு அவசியம் ஏற்பட்டால் துருப்புகளும் ஜெட் விமானங்களும் மீண்டும் அங்கு அனுப்பி வைக்கப்படும் என்று ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைனுக்கு அவை எச்சரிக்கை செய்துள்ளன. ஈராக்கில் தங்கியுள்ள அமெரிக்கப் படையினர் திருப்பி அழைக்கப்படவுள்ளனர் என அமெரிக்கப் பாதுகாப்பு திணைக்கள அதிகாரியொருவர் கூறியுள்ளார்.

## கைத்தொழில் நாடுகளிடம் நாம் பணியப் போவதில்லை

—கொர்பசேவ்

பாதிக்கப் பட்டுள்ள சோவியத் பொருளாதாரத்தைப் புனரமைப்பதற்கென கைத்தொழில்மய நாடுகளின் தலைவர்களுக்கு தாம் பணியப் போவதில்லை என்று சோவியத் ஜனாதிபதி கொர்பசேவ் தெரிவித்துள்ளார்.

லண்டனில், கைத்தொழில் நாடுகளின் தலைவர்கள் கூடவிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் சோவியத் ஜனாதிபதியின் இந்தக் கருத்து வெளியாகியுள்ளது.

அவர் தொடர்ந்து பேசுகையில், வெளிநாட்டு மூலதனத்தைச் சோவியத் நாடு வரவேற்கும் என்று சொன்னார். ஜனநாயக கொள்கைகளில் சோவியத் நாடு அக்கறை கொண்டுள்ளது என்பதைக் கைத்தொழில் நாடுகளின் தலைவர்களுக்கு வற்புறுத்தித் தெரிவிக்க விரும்புவதாகவும் அவர் மேலும் கூறினார்.

## ஜப்பானிய பேராசிரியர் கொலை

(டோக்கியோ)

சல்மான் ருஷ்டி என்பவரால் எழுதப்பட்ட சாத்தானின் வசனங்கள் என்ற நூலை ஜப்பானிய மொழியில் மொழி பெயர்த்த ஜப்பானியப் பேராசிரியர் ஒருவர் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

லண்டனில் வாழும் இந்தியரான சல்மான் ருஷ்டி எழுதிய இந்நூல் முதலில் வெளிவந்த போது முன்னாள் ஈரானிய மதத்தலைவர் ஆயதுல்லா கொமெய்னி இந்நூல் குறித்து கண்டனம் தெரிவித்ததோடு சல்மான் ருஷ்டிக்கு மரண தண்டனை விதித்ததை குறிப்பிடக் கூடியது.

## நாடுகளுக்கிடையில் சம அந்தஸ்து வேண்டும்

-லீ பெங்

(டமாஸ்கஸ்)

உலக சமாதானம், அபிவிருத்தி என்பனவற்றை நிச்சயிக்கும் வகையில் புதிய சர்வதேசக் கொள்கைகள் அமைந்திருக்க வேண்டும் என்று சீனப் பிரதமர் லீ பெங் தெரிவித்துள்ளார்

டமாஸ்கஸ்ஸில் சிரிய ஜனாதிபதி அஸாத்துடன் அவர் நேற்று முன்தினம் பேச்சுவார்த்தைகளை நடத்தினார்.

அனைத்து நாடுகளின் மக்களும் தங்களின் விவகாரங்களைத் தாங்களே தீர்மானிக்க வேண்டும். வெளிநாடுகளின் தலையீடு இல்லாது தத்தமது தேசிய நிலைமைகளுக்கு ஏற்ப தமது கொள்கைகளைத் தாமே வகுத்துக் கொள்ள வேண்டும். அவை வல்லரசாக இருந்தாலும், பலம் குன்றிய நாடாக இருந்தாலும், பெரிய நாடாக இருந்தாலும், சிறிய நாடாக இருந்தாலும் சர்வதேச சமூகத்தில் சம அந்தஸ்தைக் கொண்டிருக்க வேண்டும். இந்த அம்சங்கள் புதிய சர்வதேசக் கொள்கையில் இடம்பெற வேண்டுமென்று லீ பெங் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி அஸாத் பதிலளிக்கையில், சீனப் பிரதமரின் கூற்றுக்களைத் தான் ஏற்றுக் கொள்வதாகக் கூறி இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மேலும் பலப்படுத்தப்படும் என்று தெரிவித்தார்.

## மிருகக்காட்சி சாலைக்கு மூடுவிழா

(லண்டன்)

165 வருடம் பழமைவாய்ந்த லண்டன் மிருகக்காட்சிச் சாலை அடுத்த ஆண்டுமுதல் மூடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த மிருகக்காட்சிச் சாலையை பராமரிக்க 2 கோடியே 80 லட்சம் டாலர் தேவைப்படுகிறது என்றும் இந்த நிதியை பிரிட்டிஷ் அரசு கொடுக்க மறுத்துள்ளதாலேயே இந்தச்சாலை மூடப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வீரமரண

மைதானத்தில் ஆறு போராளிகளின் புகழுடல்களும் மணியந்தோட்டம் சனசமூக நிலைய அரங்கில் இரு போராளிகளின் புகழுடல்களும் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன.

மாவீரர்களின் புகழுடல்கள் வைக்கப்பட்ட இடங்களுக்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டுவந்து அஞ்சலி செலுத்தினர். இவ்விடங்களில் அஞ்சலி உரைகளும் நிகழ்த்தப்பட்டன.

பின்னர் உரிய இராணுவ மரியாதைகளுடன் அவ்வப்பகுதிகளில் இருந்து “பாண்ட்” வாத்திய இசைகள் முழங்க ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டது. பின்னர் அவ்வப்பகுதிகளில் உள்ள மாவீரர் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. (ஈ) (43) 86)


போர்க்கால அவசர சேவைகளுக்கான

## வேண்டுகோள்

தற்போது எமது பகுதி போர்ப் பாதிப்புகள் ஏற்பட்டிருக்கும் இவ்வேளையில் எமது அங்கத்துவ சங்கங்களின், அங்கத்தவர்கள், பணியாளர்கள் சகலரும், தத்தம் பகுதியில் காயமுற்ற, வேறு வகைகளில் அவசர உதவிகளை நாடி நிற்கும் போராளிகளுக்கு தம்மால் இயன்ற பொருளுதவி இரத்ததானம் செய்தல் ஏனைய உடலுதவி சகலவற்றையும், இயன்றளவு தாமாகவே வலிந்து வழங்கி இந்நெருக்கடி நிலையில் தாக்கங்களை இலகுவாக்குவதற்கு உதவி செய்ய வேண்டுமென்று வினயமாக வேண்டப்படுகின்றனர்.

வட-மாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவு சங்கங்களின் சமாசம்

(B/2810)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள “ஈழநாதம்” பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## சிவராஜன் குறித்து தகவல்

(சென்னை)

ராஜீவ் காந்தியின் மரணம் தொடர்பாக தேடப்பட்டு வரும் ஒற்றைக் கண் சிவராஜனுடன் சுபா மற்றும் கோகுல் என்ற வாலிபரும் பெரிய பைகளுடன் நடமாடுவதாக தமக்கு தகவல் வந்திருப்பதாக இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இவர்களது நடமாட்டம் குறித்து பொதுமக்கள் கண்காணிப்பாக நடந்து கொள்ள வேண்டும் என்றும் சி. பி. ஐ. தெரிவித்துள்ளது.

## நம்பிக்கை வாக்கெடுப்பு ஒத்திவைப்பு

(புதுடில்லி)

இந்தியாவின் ஆட்சிப்பொறுப்பை ஏற்றிருக்கும் இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவரும் பிரதமருமான பி.வி. நரசிம்மராவ் நேற்றுமுன்தினம் இந்திய லோக்சபாவின் நம்பிக்கையைக் கோரும் பிரேரணையைத் தாக்கல் செய்தார், இப்பிரேரணை மீதான விவாதம் நேற்று ஆரம்பமான போதும் வாக்கெடுப்பு எதிர்வரும் திங்கட்கிழமை வரை ஒத்திப் போடப் பட்டுள்ளது.

## தொண்டமான் கவலை

(கொழும்பு)

இந்தியா செல்லும் விசா பெறுவதற்கான கியூ ஒழியுமென நம்பினேன். ஆனால் அது நடக்கவில்லை. இவ்வாறு அமைச்சர் தொண்டமான் கவலை தெரிவித்துள்ளாரென நேற்றைய தினகரன் முதற்பக்கச் செய்தியொன்றை வெளியிட்டுள்ளது.

போராளிகளின்

எழுச்சிக் கீதங்கள் ஒலிபரப்பப்பட்டன, ஆங்காங்கே வைக்கப்பட்ட மாவீரர்களின் புகழுடல்களுக்கு மக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக திரண்டு சென்றனர். (ஈ)

## “ஏதோவகையில் முயற்சி” : ஜெயலலிதா

(சென்னை)

தம்மைக் கொல்வதற்கு ஏதோ ஒரு வகையில் முயற்சி நடந்து வருவதாக முதல்வர் செல்வி ஜெயலலிதா குறிப்பிட்டுள்ளார்.

தமது அரசு மிரட்டலுக்கோ, பயமுறுத்தலுக்கோ பணியாது என்றும் எந்த வகைய சோதனைகள் வந்தாலும் அவற்றை சந்திப்பதற்குத் தயாராக இருப்பதாக தமிழ் நாட்டு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மீண்டும் வலியுறுத்தி உள்ளார்.

## தமிழர் சிரமம் ஆராய கொழும்பில் மாநாடு

(கொழும்பு)

தமிழ் மக்களின் சிரமங்கள் குறித்து ஆராய நேற்று அவசர மாநாடு ஒன்று கொழும்பில் கூட்டப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் பணிப்பில் பிரதம மந்திரியும் பாதுகாப்பு இணை அமைச்சருமாகிய டி.பி. விஜயதுங்காவின் தலைமையில் இக் கூட்டம் கூட்டப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## 4 ஆம் வார உணவு விநியோகமில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் இடம் பெயர்ந்த மக்களுக்கு நான்காவது வார உணவு விநியோகம் இம் மாதம் வழங்கப்பட மாட்டாது நேற்று முன் தினம் யாழ். செயலகத்தில் நடைபெற்ற உணவுவிநியோகம் தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஈ)

## சமூகம் தரவும்

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா மருத்துவமனையில் சிரமதானப் பணிகளை மேற்கொள்வதற்காக விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தின் அனைத்து உறுப்பினர்களையும் இன்று காலை 9-00 மணிக்கு யாழ். வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள ‘பாலம்’ பணிமனைக்கு சமூகம் தருமாறு மாணவர் இயக்கப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

## கொரிய இணைப்பு

தென் கொரியா, வட கொரியா ஆகிய இரண்டு நாடுகளையும் மறுபடியும் இணைப்பது பற்றிய அமைச்சர்கள் நிலையிலான பேச்சுக்களை மீண்டும்தொடங்க இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன,

இது குறித்து வடகொரியாவின் யோசனைகளை ஏற்றுக் கொண்டு விட்டதாக கூறிய தென்கொரிய அரசு அடுத்த மாதம் 27ஆம் திகதி இருநாடுகளின் பிரதம மந்திரிகளும் சந்திப்பார்கள் என்று தெரிவித்தது.

## பாதுகாப்பு அமைச்சர் ராஜினாமா

பிலிப்பைன்சின் பாதுகாப்பு அமைச்சர் பிடல் ரமோஸ் தமது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார். அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கும் ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிடும் வகையிலேயே பிடல் ரமோஸ் தமது இராஜினாமாவை ஜனாதிபதி அக்கினோவிடம் சமர்ப்பித்திருப்பதாக தெரியவருகிறது.

செப். 30

...த்தல் ஆகியன இக்கொண்டாட்ட காலத்தில் இடம் பெறும். மேற்படி நிகழ்ச்சிகள் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பாடசாலை, கோட்டம், மாவட்டம் ஆகிய நிலைகளில் நடைபெறவுள்ளன.

நிகழ்ச்சிகளின் இறுதி நாளான ஒக்டோபர் 6 ஆம் திகதியன்று பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் மாநாடொன்றும் நடைபெறும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. இங்கு மகாபொல திட்டத்தைப் போன்று ஆசிரியர் நிதியம் ஒன்றும் ஆரம்பிக்கப்படவுள்ளது. மற்றும் கல்விச்சபை ஒன்றை ஆரம்பிப்பதுடன். ஞாபகார்த்த முத்திரையும் வெளியிடப்படவுள்ளது.

## கல்விக்கான நிதி அதிகரிக்கப்படும்

கல்விக்காக ஒதுக்கப்படும் நிதியை அரசாங்கம் படிப்படியாக அதிகரிக்கத் தீர்மானித்துள்ளது. கல்வி உயர் கல்வி அமைச்சர் பாராளுமன்றத்தில் இது பற்றி தகவல் தருகையில் பல்கலைக்கழகங்களுக்கு ஒதுக்கப்படும் நிதி பல்கலைக்கழகக் கல்லூரிகளுக்கு பயன்படுத்தப்பட மாட்டாதென்றும், வடகொழும்பு மருத்துவ கல்லூரி எக்காரணத்தைக்கொண்டும் தனியார் பல்கலைக்கழக கல்லூரியாக மாற்றப்படமாட்டாது என்றும் தெரிவித்தார்.

## 106 கிலோ கடத்தல் தங்கம்

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இருந்து கடந்த ஆறுமாத காலத்தில் சுங்கப் பகுதியினரின் தீவிர நடவடிக்கையினால் 106 கிலோ 300 கிராம் கடத்தல் தங்கம் கண்டு பிடிக்கப்பட்டன. இதன் மூலம் 5 கோடியே 40 லட்சம் ரூபா வருமானமாக பெற்றுள்ளனர்

## காணிவிபரங்கள் கம்பியூட்டர் மயப்படும்

(கொழும்பு)

இலங்கை காணி தொடர்பான விபரங்களை கம்பியூட்டர் மயப்படுத்த தேசிய சுவடிகள் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. இது பூர்த்தி செய்யப் பட்டால் 1800ம் ஆண்டு வரையில் எந்தவொரு காணித்துண்டு பற்றிய விபரத்தையும் பொது மக்கள் இலகுவாக பெற்றுக் கொள்ளலாம் எனத் திணைக்களப் பணிப்பாளர் கலாநிதி விமலரத்தின தெரிவித்துள்ளார்.

அரச

இக்கடனுக்கு விண்ணப்பம் செய்ய முடியாது எனவும், இந்தக் கடன் 5 வருட உச்சச் சம்பளத்திற்கு அதிகரிக்கப்படமாட்டாது.

வழமையான கடனுக்குள்ள வட்டி அறவிடப்படும் வீதம் 7 2/. ஆக இருக்கும். இக்கடனுக்கு ஆனவட்டி அறவிடப்படும் வீதம் 12 /° ஆகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சுற்று நிருபம் அரசாங்க பொதுநிர்வாக, மாகாண உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் ஆர். ஆபேயரத்தினவினால் வெளியிடப் பட்டுள்ளது. (24)

கடலோர

...றப்படும் என்று தெரிவித்தார். காவலர்களுக்கு பயிற்சி அளிக்கவும், வாகன வசதி தொலைத்தொடர்பு வசதி என்பனவற்றிற்காக சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்படுவதாக குறிப்பிட்டார். தீவிரவாதிகளால் பாதிக்கப்பட்டுள்ள மாநிலங்களின் பாதுகாப்புக்கு வழங்கப்படும் சிறப்பு உதவித் தொகை தமிழ்நாடு அரசுக்கும் அளிக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.